REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 306

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.M.K.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 25உ திங்கள் (7—6—54) ★ ★ ★ வெளியீடு: வைகாசி 26உ செவ்வாய் (8—6—54)

காங்கிரஸ் கொடியேற்று விழாவில் குழப்பம்!

—:o:—

சி. ஆர். ஆட்களின் சிறு செயல்!

'இலேசான' போலீஸ் தடியடிக்குப் பிறகு அமைதி

திருவல்லிக்கேணியைத் தொடர்ந்து வண்ணையம்பதி!

(நமது தனி நிருபர்)

சென்னை, ஜூன் 6—

வட சென்னையில் காமராஜ் தேசிய சங்கம் என்ற பெயரில் ஒரு அரசியல் அமைப்பு இயங்கிக் கொண்டு வருகிறது.

அதில், புதிதாக ஒரு காங்கிரஸ் கொடியேற்ற விழா நடைபெற்றது. அக்கொடியை உயர்த்தி வைத்த டாக்டர் வரதராஜலு, எம். எல். ஏ. அவர்கள், காமராஜர் அமைச்சர் குழுவைக் குறித்துப் பாராட்டிப் பேசினார். பேசும்பொழுது, ராஜாஜி சர்வாதிகார ஆட்சி தொலைக்கப்பட்டு ஜனநாயக ஆட்சி ஏற்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் இருந்த ஆச்சாரியாரைச் சார்ந்தவர்கள் எனச் சொல்லிக்கொள்ளப்படும் சிலர், ஆச்சாரியாரைப் பற்றி குறிப்பிட்டதை டாக்டர் வாபஸ் பெறவேண்டுமெனக் கூச்சலிட்டனர்.

டாக்டர் தொடர்ந்து பேசுவது சங்கடமாக இருந்தது. கூட்டத்திலும் பரபரப்பு ஏற்பட்டு, அமைதி கெட்டது.

கூட்டத்தில் போலீஸ்படை புகுந்தது. தடியடியும் 'இலேசாக' நடைபெற்றது. கூட்டத்திலும் கூச்சல் குறைந்தது.

அமைதி நிலைநாட்டப்பட்டபோதிலும், மேற்கொண்டு கூட்டம் நடைபெறாமல், இடையிலேயே முடிந்து போனது.

குறிப்பு:—சில நாளைக்கு முன்பு, திருவல்லிக்கேணியில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திலும், இதுபோன்ற 'குருக்ஷேத்திரம்' ஆச்சாரியார் ஆட்களால் நடத்தப்பட்டு இருப்பதை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

புதிய போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல்

சென்னை மாநில போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக இதுவரை பணியாற்றி வந்த திரு ஜே. தேவசகாயம், ஜூன் 8-ந் தேதியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்குப் பதிலாக இப்போது, குற்ற இலாகா உதவி போலீஸ்-இன்ஸ்பெக்டர் ஜெனரலாக பதவி வகித்து வருகிற திரு வி. ஆர். ராஜரத்தினம் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

ஆக்ராவில் சாதிச் சண்டை

இருபதுபேருக்குக் காயம்

ஆக்ரா, ஜூன் 6—

இருவேறு சாதிப் பிரிவினர்களுக்கிடையில், அலிகார் எனும் இடத்தில் நடைபெற்ற கைகலப்பின் பலனாக 20 பேருக்கு மேல் பலத்த காயம் ஏற்பட்டது. பல கடைகள் கொள்ளையிடப்பட்டதுடன் கொளுத்தவும்பட்டன.

ஒரு பொருளின் விலை குறித்து, ஒரு வியாபாரிக்கும், வாடிக்கைக்காரருக்கும் ஏற்பட்ட தகராறின் விளைவே, கைகலப்பிற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

ஊரில் 144 அமுலில் செய்யப்பட்டிருப்பதுடன் பலத்த போலீஸ் பாதுகாப்பும் செய்யப்பட்டு இருக்கிறது.

யமதேவன் கருணை பெற பெண்கள் நிர்வாணகோலம்!

—(:)—

சிறுர் அம்மை நோயைத் தடுக்க 'அற்புத' பூஜை!

ஜோத்பூர் மாதர்களின் அறியாமை!

ஜோத்பூரில் 'பெண்கள் கும்பமேளா' அடிக்கடி நடைபெறுகிறதாம! யம பூஜைக்கு பெண்கள் நிர்வாணமாகச் செல்கிறார்களாம!

ஜோத்பூர் நகரிலிருந்து, சுமார் 50-க்கு மேற்பட்ட பெண்கள் நிர்வாணகோலத்தில் மயானத்துக்கு அணிவகுத்துச் சென்றார்கள்; அவர்களில் சிலர் வாட்களையும், தடிகளையும், உலக்கைகளையும் ஏந்திச் சென்றார்கள்.

ஊருக்கு மூன்று மைல் தூரத்தில் மயானம் ஒன்று இருக்கிறது; அங்கே சென்று இந்தக் காரிகைகள் யமதேவனுக்கு பூஜை செய்தார்களாம்.

அம்மை நோயாலும், உஷ்ணத்தாலும் தங்கள் குழந்தைகள் மாண்டுபோகாமல் இருக்க வேண்டுமென்று யம தேவனை வேண்டினார்களாம்!

மயானத்தில், நள்ளிரவிற்குப் பின்னர் தேவதைகள் நடமாடும் என்றும், அரிசி, குங்குமம், சந்தனத்துடன் சென்று வழிபட்டால் கேடு வாராமல் தடுக்கலாம் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

இக்கும்பமேளா நிகழ்ச்சி இப்போது மட்டும் நடைபெறவில்லை; ஒரு சமயம், அனல் காற்றினால் குழந்தைகள் மாண்டுபோயினவாம்; அது முதல் இம்மாதிரி நிர்வாண ஊர்வலங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன என்று தெரிகிறது.

கிழக்கு வங்கத்தில் தலைமை ஆசிரியை கைது

இதுவரை 580 பேர் காவலில்!

டாக்கா, ஜூன் 6—

நாராயணகஞ்ச் வட்டத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியையான மும்தாஜ் பேகம் என்பவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த மே 30-ல் புகுத்தப்பட்ட கவர்னர் ஆட்சியில், முதல் முதலாக கைது செய்யப்பட்ட பெண்மணி இவரே!

கைது செய்யப்பட்ட அல்மாக்அலி என்ற ஒரு எம்.எல்.ஏ. உள்பட இதுவரை கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 580. இதுவரை கைதாகியுள்ள எம். எல். ஏ.-க்கள் 12 பேரில் மூவரைத் தவிர இதரர்கள் எல்லோரும் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள்.

இந்தத் தகவல்கள் கிழக்கு வங்க சர்க்காரால் அறிவிக்கப்பட்டன.

அரசாங்கம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் கைது செய்யப்பட்டவர்கள் சரியாக நடத்தப்படவில்லை என்று நிலவுகிற வதந்தி ஆதாரமற்றதும் பொய்யானதுமாகும்; எந்த வகையிலும் கைது செய்யப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் நன்முறை நடத்தப்படாமலில்லை என்று கூறுகிறது.

அகதிகள் குடியிருப்பு வசதிக்காக ரூ. 60 கோடி!

யூனியன் சர்க்கார் செலவு விவரம்

ஸ்ரீநகர், ஜூன் 7—

மேற்குப் பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக ஓடிவந்தவர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் இதுவரை ரூ 60 கோடி செலவிட்டிருக்கிறது. இரண்டு லட்சம் வீடுகளில் இப்போது இருபத்தைந்தரை லட்சம் அகதிகள் குடியிருக்கின்றனர்.

டில்லியில் மட்டும் 46,000 வீடுகளும், 7,000 கடைகளும் கட்டுவதற்காக 15½ கோடி ரூபாய் அரசாங்கம் செலவு செய்துள்ளது. தலைநகரில் இன்னும் வீடு கட்டுவதற்காக இந்த ஆண்டு மேலும் 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பஞ்சாபில் மட்டும் சுமார் பத்தரை கோடி ரூபாய் அகதிகளுக்கு வீடு கட்டித் தருவதற்காக மட்டும் செலவிடப்பட்டுள்ளது.

அகதிகளுக்கு பணம் கடன் தருவது பற்றி முடிவுகள் செய்யவும் ஆலோசிக்கப்படுகிறது.

இத்தகவல்கள் அகதிகள் பொருத்தம் பாதுகாப்பாளர்கள், செயலாளர்கள் ஆகியோரின் கூட்டு மாநாடு ஒன்றில் வெளியிடப்பட்டன.

கட்சிக் கூட்டம் நடத்தவும் தடை!

சிறையிலிருக்கும் கட்சித் தலைவரைக் காணவும் கூடாதாம்

கிழக்கு வங்க ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணியின் சட்டசபைக் கூட்டம் நடத்தப்படக் கூடாதென கவர்னர் ஆட்சி கட்டளையிட்டுள்ளது.

ஐ. மு. சட்டசபைக் கூட்டம் இன்று பகல் 8 மணிக்குகூடுவதாயிருந்தது. அக்கூட்டத்தையோ அன்றி வேறெந்த பொதுக்கூட்டத்தையோ ஐ. மு.-க்கள் கூட்டக்கூடாதெனக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள கட்சித் தலைவரான ஹக்கைப் பார்ப்பதற்கும், எம். எல். ஏ.-க்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பார்வை குறைந்தவர் தொகை அறிய!

ஒவ்வொரு ஏழைக்கும் இனமாக மூக்குக் கண்ணாடி!

உத்திர பிரதேசத்தின் முயற்சி

லட்சுமணபுரி, ஜூன் 6—

உத்திர பிரதேசத்தில் 41 பகுதிகளில் தேசிய விரிவு திட்டம் நடைமுறையில் அமுலிலிருந்து வருகிறது. அப்பகுதிகளில் உள்ள கண் பார்வைக் குறைந்தவர்களின் விபரத்தைச் சேகரிக்கும் துறையில், சர்க்கார் அக்கறை கொண்டு இருக்கிறது.

ஒவ்வொருவரையும் பரிசோதித்து, பார்வைக் குறைவின் தரத்தைத் தெரிந்து, அதற்கேற்ற மூக்குக் கண்ணாடிகளைக் குறைந்த விலையில் அவர்களுக்குக்கொடுத்து உதவுவதென சர்க்கார் தீர்மானித்துக் கொண்டிருக்கிறது. ஏழைகளுக்கு இனமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதாகவும் சர்க்கார் முடிவு கட்டி இருக்கிறது.

பார்வைக் குறைந்தவர்களின் தொகையைக் கணக்கிடும் பணி, சிதாபூர் மாவட்டத்தில் ஏற்கனவே முடிந்தும் விட்டது.

இதுவுமல்லாமல், கிராம மக்களின் வருமானத்திற்குத் துணை செய்யும் வகையில் குடிசைத் தொழில்களை நிர்மாணிக்கவும், கிராமங்களிடை காணப்படும் வேலையின்மையைப் போக்கவும், உத்திர பிரதேச சர்க்கார், புள்ளி விபரம் சேகரிப்பதில் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

நமது மாவட்டத்திலும்தான் தேசிய விரிவு திட்டம் சில இடங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. கண் பார்வைக் குறைந்திருப்பவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதில் ஏதாவது, நமது சர்க்கார் கவலை கொண்டு இருக்கிறதா? தொகையை அறிவதிலேயே அக்கறை பிறக்காத நிலையில், குறைந்த விலையிலோ, இனமாகவோ மூக்குக் கண்ணாடிகள் தருவது பிரச்னை எழுவதற்கு இடமேது?

நம் நாடு

[illegible] இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 7-6-54 திங்கள்

அனந்தசயனம் ஆத்திரம்!

சித்தூர் அனந்தசயனம் அய்யங்கார், யூனியன் மக்கள் சபையின் துணைத் தலைவராவார். பார்ப்பனக் குடிமக்களுக்கு ஏதாவது இடுக்கண் உறுவதாக இருந்தாலும் அல்லது அல்லல் ஏற்படக் கூடுமோ என ஐயம் பிறந்தாலும் போதும்—அய்யங்கார் சல்லடம் கட்டி கூட்டம் பேசக் கிளம்புவதைக் காணலாம்! அவ்வளவு தேசப் பற்று—இல்லை—ஜாதிப் பற்று அய்யங்காருக்கு!

நலம் பொருந்திய மத்திய சர்க்கார் தேவை என அவசிய மேற்பட்டாலும் இல்லாமற் போனாலும், அதையே தாரகமாக அனவரதமும் உச்சரித்துக் கொண்டிருப்பதில் அய்யங்காருக்கு, அய்யங்காரேதான் இணை!

நமது திராவிட இயக்கத்தைக் குறித்தும், தனி நாடு கோரிக்கையைக் குறித்தும் சிக்கறத் தெரிந்து கொண்டிருப்பவர்களில், அய்யங்கார் முதன்மையானவர் ஆவார். வட நாட்டுக்கு எதிராக தென்னாட்டில் வளர்ந்து வரும் பிரிவினை உணர்ச்சியின் வேகத்தையும், சரிவர புரிந்து கொண்டு இருப்பவர்களில் அய்யங்காரும் ஒருவர்.

அப்பிரிவினை எண்ணத்தைக் களைய, ஐதராபாத்திலாவது, பெங்களூரிலாவது யூனியன் மக்கள் சபையை, ஒவ்வொரு ஆண்டிலும் சில பல நாட்களுக்குக் கூட்ட வேண்டும் என, முதல் முதலாகப் பரிகாரமாகக் கூறிய மேதாவிகளுள்ளும் இவரைச் சார்ந்தோரும். யூனியன் சர்க்காரின் சில இலாகாக்களை பெங்களூருக்கு நிலையாக மாற்ற வேண்டுமென கிளம்பிய ஆலோசனையும், இந்த சித்தூர் கனபாடியினுடையதேயாகும்! நிற்க.

என்றென்றும் படிப்பு தங்களுக்குத்தான் சொந்தம்—மற்றவர்கள் அப்பக்கம் தலைகாட்டவும் கூடாது என பேதம் தரும் வேதமெழுதி வைத்துக்கொண்டு, நாட்டுப் பெருங்குடிமக்களின் கல்விக் கண்ணை குருடாக்கிவிட்டது, சென்ற காலச் சம்பவம்!

வேதக் கட்டளைகள் பலவும் புதைகுழி நாடிவிட்ட போதிலும், அதனுடைய பிடிப்பு, மக்களின் அறிவை இன்றும் பலமாகப் பற்றிக் கொண்டுதான் இருக்கிறது எனும் உண்மையை, மக்களின் நடத்தை மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

அந்த அக்கிரமப் பிடிப்பிலிருந்து, அனைத்து மக்களும் விடுபடுவதற்கு மேலும் சில காலம் பிடிக்குமென்பது ஒப்ப முடிந்த உண்மையாகும்.

அதுவரை, தொழிற் கல்லூரிகளில் அவரவர் வகுப்பு எண்ணிக்கைப்படி மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற வகுப்பு நீதி ஏற்பாடு ஒன்று ஏற்கெனவே இருந்தது. சென்னை சர்க்கார் நடைமுறையில் மேற்கொண்டு இருந்த இந்த வகுப்பு நீதி ஏற்பாடு, சர்க்கார் கல்விக்கூடங்களில் மட்டுந்தான் அமுலில் இருந்து வந்தது.

இவ்வேற்பாட்டின் பலனாக, பார்ப்பனர் நீங்கிய மற்றப் பெருங்குடி மக்களில் சிலர் மருத்துவர் பட்டம் பெறவும், பொறியியல் நிபுணர் பட்டம் பெறவுமான புது நிலை பிறந்தது.

சிலர் படித்துப் பட்டம் பெற்றது ஒரு பக்கம் கிடக்க, 'பார்ப்பனருக்குத்தான் கல்வி வரும், மற்றவர்க்கு அது வராது' என்று நம்பச் செய்திருந்த பித்தலாட்டம் முழுதும் கற்பனை என்பதை நிலைநாட்டுவதில், இவ்வகுப்பு நீதி நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுவிட்டது. நீண்டகாலமாகப் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு வந்த 'அற்புதம்' வெறும் அறியாமையின் விளைவு, ஏமாளித்தனத்தின் எதிரொலி என்பது நாட்டு மக்களுக்கு விளக்கமாகிவிட்டது.

வகுப்பு நீதி, நாட்டு மக்களிடம் ஒரு புதிய கண்ணோட்டத்தை உண்டாக்கியது. சமூகத்தில் பெரும் புரட்சியைத் தோன்றச் செய்தது. சாதாரண சட்டம் செய்த பெருஞ் செயல் அது!

புதிய அரசியல் சட்டத்தை இயற்றிய தென்னாட்டு 'சாமர்த்தியசாலிகள்', அடிப்படை உரிமை எனும் போர்வையில் 'வகுப்பு நீதி' ஏற்பாட்டிற்குக் குழி தோண்டி விட்டனர். சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடி, பொது ஏற்பாட்டை வேகடித்துச் சாம்பலாக்கியும் விட்டனர்.

பெருங்குடி மக்களுக்கு, புதியதோர் நோக்கையும் போக்கையும் தேடித் தந்த 'வகுப்பு நீதி' வீழ்த்தப்பட்ட பிறகு, அப்பொழுது இருந்த சென்னை காங்கிரஸ் ஆட்சியாளர்கள், தொழில் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு, நேருக்கு நேராக மாணவர்களைப் பரிட்சிப்பது எனும் ஒரு ஏற்பாட்டை உருவாக்கினர். அதற்கென ஒரு குழுவையும் நியமித்தனர்.

அந்த நேருக்கு நேர் பரிட்சைக்கு ஏற்கெனவே 50 மார்க்குகள் எனக் கணக்கிட்டிருந்தனர். அதைத்தான் இவ்வாண்டு 100 என உயர்த்தி உள்ளனர்.

இந்த மாற்றத்தைக் கண்டதும் பார்ப்பனக் குடி மக்கள் அக்கலாய்க்கக் கிளம்பியுள்ளனர். மற்றவர்களை வாயடக்க 'இந்தியர்கள்' எனக் கூறி ஏமாற்றி வருபவர்கள் எல்லாம், தங்கள் நெஞ்சில் நிரம்பிக் கிடக்கும் ஜாதி வெறியை வெட்கம் துளியும் இல்லாமல், வெளியில் கக்குகின்றனர்.

[illegible] நாடு யாருக்கு ஏற்பா[illegible] எல்லோருக்கும் பொதுவான ஒரு ஏற்பாட்டையும் [illegible] பார்ப்பனர் [illegible] கிளம்பியிருப்பது ஆச்சரியமாகவே இருக்கிறது.

டாக்டர் சீனிவாசன் என்ற சென்னை மேல்சபை உறுப்பினர், இப்புதிய ஏற்பாட்டை எதிர்த்து பத்திரிகைகளுக்கு முடங்கல் தீட்டியுள்ளார். பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' எனும் ஆங்கில தினத்தாளின் சென்னை பார்ப்பன நிருபர், ஏற்பாட்டிற்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பி இருப்பதாக, அவ்விதழுக்குத் தகவல் தந்துள்ளார்.

அனந்தசயனம் அய்யங்கார் சென்னையில், ஆத்திரங் கொண்டு, ஏற்பாட்டைத் தாக்கிப் பேசி இருக்கிறார். அரசியல் சட்டத்திற்கு, இப்புதிய ஏற்பாடு முரணானது எனும் போலி வாதத்தைக் கிளப்பியுள்ளார். 'ஏற்பாட்டை அறவே கைவிட வேண்டும் அல்லது 100 மார்க்காக உயர்த்தக் கூடாது' என சென்னை சர்க்காருக்கு எச்சரிக்கையும் செய்துள்ளார்.

ஏற்கெனவே இருந்தது போல் 50 மார்க்களவே இருந்தால், அவ்வேற்பாடு அரசியல் சட்டத்திற்கு முரண்படாது என அய்யங்கார் கருதுகிறார் போலும்! எது எதற்குத்தான் அரசியல் சட்ட விதிகள், இந்தப் பேராசைக்காரத் திருக் கூட்டத்திற்குத் துணை நிற்குமோ, நாம் அறியோம்!

நேரில் பரீட்சித்துத்தான் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனும் தீர்மானம் ஒன்றை, அண்மையில் லண்டனில் நடைபெற்ற அகில உலக மருத்துவக் கல்வி மாநாட்டினர் நிறைவேற்றியுள்ளனர். அதற்கு உலக மக்கள் ஒப்புதல் ஒருமிக்கக் கிடைத்தும் இருக்கிறது.

இந்தியன் சிவில் சர்வீஸ் பரீட்சையிலும், நேருக்கு நேர் பரீட்சிப்பதற்குத்தான் முக்கியத்துவம் காட்டப்படுகிறது. நேர் பரீட்சைக்கு 200 மார்க்குகள்—அதாவது, மொத்த மார்க்குகளில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கு மார்க்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எழுதும் பரீட்சைகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக உள்ளனர் என்று குற்றம் சாட்டுகின்றனர் கல்வி நிபுணர்கள். பரீட்சையில் பெறும் மார்க்குகளைக் கொண்டு ஒரு மாணவனின் அறிவாற்றலை நிர்ணயிக்க முடியாது எனக் குறைபட்டுக் கொள்வது, நிபுணர்களிடை பரவலாக உள்ளது.

ஆண்டுதோறும் வெளியாகும் சர்வீஸ் கமிஷன் தேர்வு அறிக்கையோ, நகைப்புக்குரிய பொருத்தமற்ற பதில்களைக் கூறும் மாணவர்களைப் படம் பிடித்துக் காட்டியவண்ணம் உள்ளது.

இத்தகு சூழ்நிலையில் மாணவர்கள் எழுதும் பரீட்சை மார்க்குகளை மட்டுமே ஒரு பொருட்டாக மதிக்காமல், மாணவரை நேரில் பார்த்து பரீட்சை செய்து தொழில் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வதுதான் சிறந்த முறையாகும். அதற்கென 100 மார்க் எண்ணிக்கையைப் புகுத்தியிருப்பதும் பொருத்த முடையதாகும்.

பார்ப்பனக் குடி மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி, உயர்த்தியுள்ள மார்க்கு எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளக் கூடாது என சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஜப்பானில் பொருளாதார நெருக்கடி!

—(:)—

விலைவாசிகள் சரிகிறது! வாங்கும் சக்தியும் வீழ்கிறது!

வெளிநாட்டுச் சந்தைக்கு வலை போடுகிறது!

ஜப்பானில் ஆலைத் துணிகளின் விலை சரிந்து கிடக்கிறது; உள்நாட்டில் மக்களின் வாங்கும் சக்தியும் தீவிரமாக வீழ்ச்சி அடைந்து கிடக்கிறது. எனவே, வெளிநாட்டுச் சந்தைகளுக்கு வலை போட வேண்டிய கட்டாயம் ஜப்பானுக்கு ஏற்பட்டு இருக்கிறது.

இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு உடனடியான காரணம் ஒன்றே ஒன்றாகும்.

ஜப்பானில் உள்ள ஆலை அரசர்களுக்குள்ளாகக் கழுத்தறுப்புப் போட்டியே முக்கியமாகும். சிறிய ஆலைகளின் போட்டியைச் சமாளிப்பதற்காக, பத்து பெரிய நெசவாலைகள், தங்கள் உற்பத்திப் பொருள்களின் விலையைப் பெரிய அளவில் குறைத்துவிட்டனர்.

ஏற்றுமதியிலும் போட்டி பலமாக இருக்கிறது; ஏற்றுமதி செய்யப்படும் அளவிற்குத்தான் பஞ்சு இறக்குமதி செய்வதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு முதல் நான்கு மாதத்தில் 43 40,000 00 சதுர கெஜம் பஞ்சுத் துணியை ஜப்பான் ஏற்றுமதி செய்திருக்கிறது. இதே காலத்தில் சென்ற ஆண்டில் ஜப்பான் ஏற்றுமதி செய்தது 2,50,000,00 சதுர கெஜம் துணியேயாகும்.

கம்பளி, செயற்கைப் பட்டு ஆகிய இரு இனத்திலும், நிலைமை பஞ்சு துணி நிலைபோன்றேதான் இருந்து வருகிறது.

உள்நாட்டில் பட்டுத் தொழிலுக்குப் பாதகமேற்படுவதைத் தவிர்க்க, தேங்கிக் கிடக்கும் செயற்கைப் பட்டுத் துணிகளை ஏற்றுமதி செய்ய வேண்டியது கட்டாயமாகிறது என தொழிலில் தொடர்புடையவர் கருதுகின்றனர்.

உள்நாட்டில் விற்பனையாவதைக் காட்டிலும் வெளிநாட்டில் விற்பனை செய்தால் கடன் வசதி கிடைப்பது முக்கியமாகையால், இரும்பு ஆலைகளும் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் தீவிரம் காட்டுகின்றன.

இப்பொழுது அமுலில் இருந்து வரும் நாணயச் செலாவணி மதிப்பைக் குறைத்து வைத்திருப்பதானது, வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கலின் நிலை சீர்படுகிற வகையில் மேலும் நீடித்து இருப்பதானால், ஜப்பான் பொருளாதார நிலைக்கு ஏற்றது என நிபுணர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

3 மகாராஷ்டிர ராஜ்யங்கள்

கூடாது என எச்சரிக்கை

பாராளுமன்ற உறுப்பினரான என். எஸ். மூர் என்பவர் மகாராஷ்டிரம் பேசும் பகுதிகளை மூன்று நாடுகளாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை கண்டிக்கிறார்.

தொழிலாளர்—விவசாயிகள் கட்சித் தலைவரான இவர், கோலாப்பூர் நகரசபையால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்றில் பேசுகையில் மூன்று நாடுகள் வேண்டுமென்ற இக்கோரிக்கை மகாராஷ்டிரத்தின் முன்னேற்றத்தை தடைசெய்யுமென்றார்.

மொழிவாரிப் பிரிவினை வேண்டுமென்ற கோரிக்கை மொழியின் மீதுள்ள அன்பால் மட்டும் ஏற்பட்டதில்லை — பிரிவினையின் மூலம் பொருளாதார, கலாச்சார முன்னேற்றம் சுலபமாக்கப்பட வேண்டுமென்பதேயாகும் என்று அவர் மேலும் கூறினார்.

நில சீர்திருத்தம் புதிய மசோதா!

கொண்டுவரப் போவதாக காமராஜர் தகவல்

கோவை, ஜூன் 2—

"சென்னை மாநிலத்தில் விரிவானதொரு நிலச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள எண்ணியிருக்கிறோம்;

"நில அளவு நிர்ணயம், நிலமற்றோர்க்கு நிலம் வழங்குதல், இதற்காகப் பெறப்படும் நிலங்களுக்கு நஷ்டஈடு தருதல் ஆகிய பிரச்னைகள் வெகுகவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியிருப்பதால், மாநில சட்டசபையில் இதுபற்றிய மசோதாக் கொண்டுவர, சிறிது காலம் பிடிக்கலாம்," என்று சென்னை முதன் மந்திரி திரு. காமராசர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

கார் ஏறி மாண்ட பிச்சைக்காரியிடம் ரூ. 238!

ஈரோடு, ஜூன் 4—

இங்கு, 70 வயதான [illegible] என்னும் கிழப் பிச்சைக்காரியின் மீது மோட்டார் ஏறியது; கிழவி மாண்டாள்; அவளை சோதித்துப் பார்த்ததில் அவளிடம் ரூ 238 இருக்கப் போலீசார் கண்டுபிடித்தனர்.

சூரிய வெப்பம்

மின்சக்தியாக மாற்றப்படும்

அமெரிக்க ஆராய்ச்சி வெற்றி

வீடுகளில் பயன்படுத்தும் வகையில் சூரிய வெப்பத்தை மின்சக்தியாக மாற்றும் முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டதாக அமெரிக்க விமான இலாகா அறிவித்தது.

வீட்டுக் கூரையின் மீதோ, அல்லது உட்புறத்திலோ அமைக்கப்படும் கெட்டியான தகடு போன்ற அமைப்பொன்றின் மூலம் மின்சக்தி எடுக்கப்படும்.

வெயில் அடிக்கும்போது பயன்படும் 'காட்மியம் சல்பைட்' என்ற இரசாயனப் பொருள் மூலம், 'சோலார் ஜெனரேட்டர்' என்ற இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

4 அடி அகலமும் பதினெட்டடி நீளம் உள்ள தகடு போன்ற 'சோலார் ஜெனரேட்டர்' ஒரு வீட்டிற்குப் போதிய மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று தெரிகிறது.

ஓஹியோவில் உள்ள 'ரைட்' விமான ஆராய்ச்சி நிலையத்தார் இந்தக் கருவியைக் கண்டுபிடித்தனர்.

இது அமெரிக்காவில் சூரிய வெப்பத்தை மின்சார சக்தியாக மாற்றும் முயற்சியில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது கருவியாகும்.

ஏப்ரல் மாதத்தில் 'பெல் டெலிபோன்' ஆராய்ச்சி நிலையத்தார் 'சோலார் பாட்டரி' ஒன்றைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.

கன்னட மொழிவழி மாநில அமைப்பில் சிக்கல்

'இரண்டு கன்னட மாநிலங்கள் தேவை' —ஒக்கலிகர்கள்

'ஒன்றே ஒன்று போதும்' —லிங்காயத்துகள்

பெங்களூர், ஜூன் 4—

மைசூர் காங்கிரஸ் சட்டசபைக் கட்சியினருக்குள், கன்னட மொழி மாநில அமைப்பு பற்றி விவாதம் நடைபெறுகிறது.

கன்னட மொழி பேசும் மக்கள் வசிக்கும் பகுதிகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து பெங்களூரைத் தலைநகராகக்கொண்டு ஒரே கர்நாடக மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்பதை ஒரு சாரார் ஆதரித்தனர்.

பெரிய நிலப்பரப்பை ஒன்றாக இணைப்பது மைசூரின் நலன்களுக்குக் கேடு சூழ்வதாகும் எனவும், எனவே மைசூரின் தனித்தன்மை கெடாமல் காப்பதற்கு இரண்டு கன்னட மொழி மாநிலங்கள் தேவை என ஒரு சாராரும் கோரினர்.

இந்த இருவித கருத்திலும் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பாத ஒருவர் இரண்டு கன்னட மாநிலங்கள் தேவை என வலியுறுத்தினவர்கள் அனைவரும் ஒக்கலியர்களாகவும், ஒரே மாநிலம் வேண்டுமெனும் கோரிக்கையை ஆதரித்தவர்கள் அனைவரும் லிங்காயத்துகளாகவும் இருப்பதை எடுத்துக் காட்டினார்.

சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர்களாக உள்ள மொத்தம் 72 பேர்களில், 33 பேர் ஒக்கலியர்களாகவும் 17 பேர்கள் லிங்காயத்துகளாகவும், எஞ்சியவர்கள் வெவ்வேறு சமூகத்தவர்களாகவும் இருக்கின்றனர்.

கர்நாடக மாநிலம் ஒன்றா இரண்டா என்பதைத் தீர்மானிப்பது, ஒக்கலிகர்-லிங்காயத்தார்கள் நீங்கலாக, மற்ற சமூக காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது.

'இவ்விரு கோரிக்கைகளுக்கும் கூறப்படும் காரணங்களை விலக்கி விட்டால், எஞ்சியிருப்பது வெறும் வகுப்புப் பிரச்சினையேயாகும். இதைத் தவிர்த்து வேறு ஒன்றும் இடையிலே கிடையாது.

'ஒக்கலியர்கள் மைசூரில் பெரும்பான்மையினராக உள்ளனர். ஒரு கர்நாடக மாநிலமாக அமைக்கப்பட்டால் லிங்காயத்துகள் பெரும்பான்மையினராக ஆகி விடுவர். ஏன் சிலர் இரண்டு மாநிலம் தேவை என்றும், சிலர் ஒரே மாநிலம் தேவை என்றும் கோருகிறார்கள் என்ற உண்மையை, இப்போழுது நீங்களே உணர்ந்துகொள்ளலாம்' என ஒரு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் விளக்க முரைத்துள்ளார்.

இரத்தக் கொதிப்புக்கு அரிசி உணவே மருந்து

அமெரிக்க நிபுணர் கருத்து

இரத்தக் கொதிப்புக்குச் சரியான மருந்து அரிசி உணவே என்று இரத்தக் கொதிப்பு, இருதய நோய், சிறுநீரகத் தொல்லை ஆகிய பிணிகள் பற்றி பத்து ஆண்டுகளாக 2,000 நோயாளிகள் மூலமாக ஆராய்ந்ததில் தெரிய வருகிறது. 1944-ல் இந்த அரிசி உணவுச் சிகிச்சையை முதன் முதற் கண்டுபிடித்த அமெரிக்க டாக்டர் வால்டர் கெம்ப்னர் இவ்வாறு அறிவிக்கிறார்.

இரத்தக் கொதிப்பும், அதைத் தொடர்ந்த நோய்களும் உள்ளவர்கள் வழக்கமாக உண்ணும் உணவுக்குப் பதில் அரிசிச் சோறும், பழங்களும், சர்க்கரையும் உண்டு வந்தால் அப்பிணிகளின் போக்கே மாறிவிடும் என்கிறார் டாக்டர் கெம்ப்னர். நோய் முற்றுவதற்கு முன்பிருந்தே இத்தகைய பத்தியத்தைக் கண்டிப்பாகக் காத்துவர வேண்டும் என்கிறார் அவர்.

இருமலைப் போக்க "நார்கோடின்"

100 ஆண்டுகளாக மக்களுக்கு தெரிந்துள்ளதும் உபயோகமற்றதாக கருதப்பட்டு வந்ததுமான "நார்கோடின்" என்ற போதை தரும் ரசாயனப் பொருள், இருமலை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தது என்று ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தின் வைத்திய சாலையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியின் பயனாகத்தான் இது தெரிய வந்தது.

அரசாங்கப் பணியாளர் வருடாந்திரக் கூட்டம்

சென்னை, ஜூன் 4—

சென்னை அக்கௌண்டன்ட் ஜெனரல் அலுவலகப் பணியாளர்களின் வருடாந்திரக் கூட்டம் நேற்று அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது. சென்னை அக்கௌண்டன்ட் ஜெனரல் திரு ஏ. பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். அலுவலர் சங்கச் செயலாளர் தோழர் ஆர். சுப்பையா சங்கத்தின் ஆண்டு அறிக்கையில், பணியாளர்களுக்குத் தேவையான சிற்றுண்டிச்சாலை விளையாட்டிடம், புத்தகசாலை இவைகளில் உள்ள வசதிக் குறைகளையும் இன்ன பிறவற்றையும் போக்க சங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாகவும் இவற்றை மேலதிகாரிகள் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். தலைவர் முடிவுரைக்குப் பின், பல தமிழ் கலைநிகழ்ச்சிகள் தோழியர் சகிலாவின் நடனமும் நடைபெற்றன. கூட்ட முடிவில், சட்டக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் தேநீர் விருந்து ஒன்று நடைபெற்றது. (ச நி)

ராக்கட் விமானத்தின் உலக ரிக்கார்டு

வாஷிங்டன், ஜூன் 4—

நியூ மெக்ஸிகோவில் ஒரு வெள்ளை மணல் பிரதேசத்தின் மேலே ஒரு ராக்கட் விமானம் மணிக்கு 4300 மைல்கள் வேகத்தில் பறந்து, பூமியிலிருந்து 158 மைல் உயரத்துக்குச் சென்றது; இதற்குமுன் ராக்கட் சென்ற அதிக உயரம் 136 மைல்களாகும்; எனவே 158 மைல் உயரம்தான் தற்பொழுதுள்ள உலக ரிக்கார்டு!

திட்டங்களை நிறைவேற்றுவதற்கு காரணம்!

—(:)—

பணமுடையல்லவாம்! நிபுணர்கள் கிடைக்காததே காரணமாம்!

யூனியன் நிதி அமைச்சர் கூற்று!

ஐதராபாத், ஜூன் 4—

"குறிப்பிட்ட சில சாதனங்களை, எந்த வகையில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் பயன்படுத்தப்பட வேண்டுமோ, அதற்குள் பயன்படுத்த முடியாமற் போனதின் விளைவுதான் வேலையில்லாத் திண்டாட்டமாகும். திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணத் தட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில் பணத்தட்டின் காரணமாக, நான் அறிந்த வரையில், எந்தத் திட்டமும் நிறுத்தப் பட்டதாக அறவே சொல்வதற்கில்லை. திட்டங்களை மேற்கொள்ள தேவையான இஞ்சினீயர்களும், ஓவர்சீயர்களும் கிடைக்காததே முக்கிய காரணமாகும்,"

—என்று யூனியன் சர்க்கார் நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

இப்புதிய கண்டுபிடிப்புக்கு, மாநில சர்க்கார்கள் மீது பழி போட்டுள்ளார். 'ஆடத் தெரியாதவள் கூடம் கோணல்' என்றுனரமே. அதுபோல இருக்கிறது நிதி அமைச்சரின் பேச்சு!

"மாநில சர்க்கார்கள், தொழில் நிபுணர்களை பெருக்கும் வகையில், தங்களுடைய கல்வித் துறையைத் திருத்தி அமைத்தால் அல்லாது, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கணிசமாகக் குறைப்பது என்பது ஒருக்காலும் முடியாது," எனத் தேஷ்முக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இஞ்சினீயர்களையும், ஓவர்சீயர்களையும் பெருக்கும் அற்புதத்தை இடைமுடி நிறைப்பதற்குள் மாநில சர்க்கார்கள் செய்து முடித்தால் தான், பயங்கரமாக வளர்ந்து வரும் வேலையின்மையைப் போக்க யூனியன் சர்க்காரால் முடியுமாம்! இல்லையேல், வேலையின்மையும் பெருகும்! வேதனையும் வளரும்! பஞ்சத்திலும் பட்டினியிலும் மக்கள் சாவது, மிக மிகச் சாதாரணச் சம்பவமாகி விடுமாம்!

இந்தியத் துணைக் கண்டத்தில் வேலையற்றுத் தவிப்பவர் தொகைக்கு சரியான புள்ளி விவரம் கிடையாது எனவும், வேலை தேடித்தரும் நிலையத்தின் குறிப்பைக் கொண்டுதான் வேலையற்றோர் எண்ணிக்கையை சர்க்கார் நிர்ணயிக்கிறது எனவும், தேஷ்முக் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

நாகப்பட்டினம் தி. மு. முன்னேற்றக் கழகம்

30—5—54ல், கழக செயற்குழு கூடி தஞ்சை அருளானந்தர், தோழர் குமரவேல் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், புதிய கல்வித் திட்டம் ஒழிந்தமைக்கு மகிழ்ந்தும், மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சி. பி. சிற்றரசுக்கு தேநீர் விருந்து

9-5—54 மாலை 4 மணியளவில், கோலார். தி. மு. கழகச் சார்பில், ஆண்டர்சன்பேட்டையில் தோழர் க. தங்கவேலன் தலைமையில் தோழர் சி பி சிற்றரசு அவர்களுக்கு தேநீர் விருந்து நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 'ஊழியர் கடமை' என்னும் பொருள் குறித்து சொற்பொழிவாற்றினார்.

தமிழன்பர்கள் வாசகசாலை திறப்பு விழா

30—5—54 மாலை கோவைக் கடுத்த சுந்தரபுரத்தில், தமிழன்பர்கள் வாசகசாலை திறப்புவிழா திரு எம் பி ஜெகநாத கோனார் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, பல பொருள்கள் பற்றி பிரமுகர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

சவுந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

தாராவி, (பம்பாய்) மே 31—

26—5—54ல், தோழர் குறள்தாசன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, மன்றத்திலேயே சொற்பயிற்சி வகுப்பு நடத்துவதெனவும், செயலாளராக தோழர் வடலைக்குயில் அவர்களைத் தேர்ந்தெடுத்தும், மன்றத்தின் முதியோர் கல்வி நடத்துவதெனவும், புதிய கல்வித் திட்டத்தை கைவிட்டதற்கு சென்னை முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தும், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

தி. மு. இளைஞர் கழகம்

நிலக்கோட்டை, மே 10—

6—5—54ல், கழக உறுப்பினர்கள் கூட்டம் செயலாளர் மு. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகிய தோழர் வ. பாஸ்கரனை தி. மு. கழக உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டது. பின்னர், பாரதிதாசன் பகுத்தறிவுப் படிப்பக ஆண்டு விழாவை கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

பம்பாய் தெ. இ. ஆ. மகாஜன சங்கம்

30—5—54ல், சங்கத்தின் 14-வது ஆண்டு பேரவை, தோழர் ஒ. த. அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. ஆண்டு அறிக்கையும் வரவு—செலவு கணக்குகளும் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. பின்னர் 1954—55ம் ஆண்டுக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருச்சி மாவட்ட மருத்துவர் மாநாடு

திருச்சி ரத்தினவேலு தேவர் மன்றத்தில் ஜூலை முதல் வாரத்தில் மேற்படி மாநாடு நடைபெறும். திருச்சி மாவட்ட மருத்துவர் சங்கங்கள் கட்டணங்களைக் கட்டி 15—6—54க்குள் ஆலோசனைகளை—"திருச்சி மாவட்ட மருத்துவர் சங்கம், வழிகாட்டி, தெப்பகுளம், திருச்சி" என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

"முயற்சி"

திராவிட முன்னேற்றக் கழக கொள்கைகளைத் தாங்கி திங்கள் இருமுறை இதழாக 15—6—54 முதல் மதுரையிலிருந்து வெளிவருகிறது.

"கலைஞன்" நாடகம்

24—5—54ல், குலசேகரபுரத்தில், அழகிரி அரங்கில தோழர் காஞ்சி குணசேகரமணி எழுதிய "கலைஞன்" என்னும் நாடகம் அன்று புதுமைக் கலைமன்றச் சார்பில் நடைபெற்றது.

விருதை தமிழறிஞர் வேதமுத்து

பம்பாயில் வரவேற்பு

பன்னூலாசிரியரும், தமிழறிஞருமான விருதாகர் திரு. சா. வேதமுத்து அவர்களுக்கு பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்க ஆதரவில் ஓர் பாராட்டுக் கூட்டம் தாராவியில் 28—5—54ல் நடைபெற்றது. தோழர்கள் க. ஐ சுப்பையா வரவேற்புரை நிகழ்த்தினர்; ஒ. த. அய்யாசாமி தலைமை வகித்தார். தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர். தமிழறிஞர் அவர்கள், வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

வள்ளுவர் கழக 3-வது ஆண்டு விழா

அத்தக்குடி, ஜூன் 3—

30—5—54 இரவு 7 மணிக்கு வள்ளுவர் திடலில், கழக ஆண்டு விழா கே. கே. ஏ பெரியசாமி அரங்கில், தோழர் ஏ. எம். என். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. தோழர் த. பால்பாண்டியன் கழக நிலை என்பது பற்றி பேசியபின், திருவள்ளுவர், பெரியார், வி. வி. தனுஷ்கோடி ஆகியோர் உருவப்படங்களை முறையே தோழர்கள் க பெருமாள், வே ஏகாம்பரம், திவான் பி. ராமசாமி ஆகியோர் திறந்து வைத்தனர்.

மு. வ. படிப்பகம்

கமுதூர், ஜூன் 4—

இவ்வூரில் 25—5—54ல், மேற்படி படிப்பகம் நிறுவப்பட்டு, தலைவர் திரு. கலியமூர்த்தி, செயலாளர்: திரு. சுபான்; பொருளாளர்: முத்துக்கண்ணன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உங்களுக்குத் - - தெரியுமா?

★

கேள்விகள்:

1. விசாகப் பட்டினத்திலுள்ள கப்பல் துறையில் கட்டப்பட்ட முதல் பெரிய கப்பல் எது?
   (அ) ஜல உஷா
   (ஆ) ஜல புதார
   (இ) ஜல ஜவாஹர்
2. சுமார் 1500 அடி நீளமும், 208 அடி உயரமும் உள்ள கீழ்ப் பவானி அணையின் உதவிகொண்டு ஆண்டுதோறும் அதிகப்படியாக விளைவிக்கப்படக்கூடிய உணவு தானியத்தின் மொத்த அளவு என்ன?
   (அ) சுமார் 30,000 டன்
   (ஆ) சுமார் 40,000 டன்
   (இ) சுமார் 50,000
3. சித்தரஞ்சனிலுள்ள சர்க்கார் ரயில்வே உற்பத்திசாலை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
   (அ) ஆகஸ்ட் 15, 1950
   (ஆ) ஜனவரி 26, 1950
   (இ) அக்டோபர் 2, 1950
4. இந்தியாவிலுள்ள உயர்தரப் பள்ளிக் கூடங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? (இந்தப் பள்ளிக்கூடங்களில் சுமார் 2,00,000 உபாத்தியாயர்கள் உள்ளனர்)
   (அ) சுமார் 8,000
   (ஆ) சுமார் 10,000
   (இ) சுமார் 12,000
5. சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில், 1954 இறுதிவரை, பொது மக்கள் அளித்துள்ள உதவியின் மொத்த நாணய மதிப்பு எவ்வளவு?
   (அ) சுமார் ரூ 1 கோடி
   (ஆ) சுமார் ரூ. 1½ கோடி
   (இ) சுமார் ரூ 2 கோடி

விடைகள்:

1. (அ); 2 (இ); 3. (ஆ); 4 (ஆ); 5. (இ).

உலக அரங்கில்

வாஷிங்டன் :
இந்தோ-சீனாவுக்கு போர்த் தளவாடங்களை அனுப்ப போக்குவரத்து வசதிகளுக்கு ஏற்பாடு செய்து தருமாறு, அமெரிக்காவை பிரான்ஸ் கேட்டிருக்கிறது. இந்த உதவி அளிக்கப்படும் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

★

சான்பிரான்சிஸ்கோ :
சான்பிரான்சிஸ்கோவில் இந்தியாவின் கான்சல்-ஜெனரல் அசிம்உசைன் டெல்லியில் வெளிநாட்டிலாகா காரியதரிசியாகப் பதவி ஏற்க புதுடில்லிக்குப் புறப்பட்டார்.

★

மிட்போனர் :
சீன விவசாயிகள் போல் நவர்கள்தான் ஆங்கிலேய விவசாயிகளும் என்று பிவான் கூறினார். சீக்கிரமே ஆங்கிலேயத் தூதுகோஷ்டி ஒன்று சீனாவிற்கு வர இருக்கிறது என்றார்.

★

கோபன்ஹேகன் :
"சோவியத் ரஷியா தன்னைப் போன்றே உலக முழுமையும் கம்யூனிச நாடுகளாக மாற வேண்டுமென்ற வெறி பிடித்த எண்ணத்தைவிட வேண்டும்; அப்போதுதான் உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முடியும்," என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் அட்லி கூறினர்

• • •

டேனிஷ் அரசர் பெடரிக் இந்திய சுகாதார அமைச்சர் திருமதி அம்ருத கௌர் அவர்களை வரவேற்றார். திருமதி அம்ருத கௌர் டென்மார்க்கில் தற்போது சுற்றுப் பயணம் செய்கிறார்.

★

அங்காரா :
விவசாய சாமான்களைச் செய்ய 10 மில்லியன் டாலர் மூலதனம் கொண்ட அமெரிக்கக் கம்பெனி ஒன்றுடன் துருக்கி அரசாங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டது. துருக்கியின் வெளிநாட்டு மூலதனச் சட்டம் அமுல் செய்யப்பட்ட பின்னர், வெளிநாட்டிலிருந்து பெரிய கம்பெனி ஒன்று துருக்கியில் தொழில் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டது இதுவே முதல் தடவையாகும்.

★

பெர்லின் :
கிழக்கு ஜெர்மனியின் குடியரசுத் தலைவர் ஹெர் வில்லம் பிக், திடீரென்று இளைஞர்கள் விழா ஒன்றில் கலந்து கொண்டார். நீண்டகாலமாக வெளியில் வராமல் இருந்த அவர், இப்போது மக்களிடையே கலந்து கொண்டது பற்றி அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

★

டோக்கியோ :
டோக்கியோவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சிறிது பூமி அதிர்ச்சி காணப்பட்டதாம்; சேதம் எதும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

★

ஏதென்ஸ் :
கிரீஸ், துருக்கி, யுகோஸ்லேவியா ஆகிய மூன்று நாடுகளும் தங்களுக்கென்று தனியாக ஒரு ஆலோசனை சபையை வைத்துக் கொள்வது என்று முடிவு செய்திருக்கின்றன.

★

போர்ட் எலிசபெத் :
ஜோஹன்ஸ்பர்க்கில் நடைபெறும் ஐனைட்டட் பார்ட்டி மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற மேயர் ... போர்ட் எலிசபெத் பல்கலைக் கழகத் தலைவருக்கு பாஸ்போர்ட் தர மறுத்துவிட்டனர்.

ஜினீவா :
சீனாவில் சிறையில் இருக்கும் அமெரிக்கர்கள் பற்றி அமெரிக்கத் தூதகோஷ்டியினர், சீனப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்கள். அமெரிக்கர்கள் சீனர்களுடன் ராஜீய விவகாரங்கள் பற்றிப் பேசுவது இதுவே முதல் தடவையாகும். அமெரிக்காவில் காவலில் உள்ள சீன மாணவர்கள் பற்றியும் பேசப்பட்டதாம்.

★

கெய்ரோ :
4,700 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்ட சவப் பெட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

★

பாரிஸ் :
சோவியத் விஞ்ஞானக் கழகம், உலக சரித்திரம் ஒன்றைப் பத்து பாகங்களாக வெளியிட ஏற்பாடுகள் செய்கிறது. மார்க்சிய சித்தாந்த கோணத்திலிருந்து உலக சரித்திரம் எழுதப் படுமாம்.

★

காக்ஸ் :
சுவிட்சர்லாந்தில் நடைபெறும் உலக அறநெறி மாநாட்டில் காந்தியார் தான் உலகில் அறநெறியுடன் மக்கள் வாழும் நிலையைச் சொல்லியிருக்கிறார் என்று பம்பாய் மேயர் தயாவாய் பட்டேல் கூறினார்.

★

இரங்கூன் :
பர்மா எந்த வல்லரசுடனும் சேராமல் தனித்து நிற்கும் என்று பர்மியப் பிரதமர் யு-நு கூறினார்.

★

வியன்னா :
வடயுகோஸ்லோவேகியா, தென் ஆஸ்திரியா ஆகிய பகுதிகளில் வெள்ளப் பெருக்கால் பலர் மாண்டுபோயினர் என்று தெரிகிறது.

★

நியூயார்க் :
அமெரிக்க தொழிற்சாலைகளில் நீக்ரோக்களுக்கு கொன்று குறைவாக சம்பளம் தரும் நிலைமை மிகவும் குறைந்து போயிருறு என்று செனட்டர் கென்னத் மில்லர் கூறினார்.

★

ஜார்ஜ்டவுன் :
சுபராஜ் சிங் என்ற இந்தியரைக் கொலை செய்தார்கள் என்று கயானா வாசிகளான ஜோசப் டானியல், ஜோசப் அலெக்சாண்டர் என்ற இரண்டு நீக்ரோக்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

★

சாலிஸ்பரி :
ரொடீஷியாவில் நடைபெறும் ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் சி. ஆர். டைலர் என்ற பயர்மென் ஒருவரைக் கைது செய்தனர் என்று தெரிகிறது.

★

மெல்போர்ன் :
ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் ரிச்சர்ட் கேசி ஜினீவாவிலிருந்து திரும்பும் வழியில் பண்டித நேருவைச் சந்திப்பார்.

★

கொழும்பு :
இந்தோ-சீனப் போர் நிறுத்தக் கமிஷனில் சேர இலங்கை மகிழ்ச்சியுடன் தயார் என்று இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை அறிவித்தார்.

★

தெஹ்ரான் :
பிரிட்டனை நாட்டிற்கு வெளியே கடத்திச்செல்ல உதவினார்கள் என்று டஜன் அதிகாரிகளை டெஹ்ரான் சர்க்கார் வேலையிலிருந்து நீக்கிவிட்டனர்.

கழகக் கூட்டம்

★

இடையக்கோட்டை
குமாரமுத்து திடலில்
9—6—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு
பி சமதர்மம்
எல் வீராசன்

திருத்துறைப்பூண்டி
தி. மு. கழக செயலாளர்களுக்கு
10—6—54 மாலை 4 மணிக்கு திருத்துறைப்பூண்டி தாலுக்கா தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நெடும்பலத்தில் நடைபெறும். கிளைக் கழக செயலாளரையோ அல்லது அவரது அதிகாரம் பெற்றதொரு பிரதிநிதியையோ அனுப்பிவைக்கவும். வட்டக் குழு அமைத்தல் பற்றி ஆலோசிக்கப் படும்.

மு. கருணாநிதி நிகழ்ச்சிகள்

ஜூன் 8-ந் தேதி முடிய—
தஞ்சை மாவட்டம்
10: சிறுமருதூர் (தெ. ஆ.)
11, 12: நாஞ்சில்
13: ஜெயங்கொண்டத்தில் உடையார் பாளையம் வேலாயுதம் மகளின் திருமணம்;
இரவு — சென்னை (நாடகம்)

* * *

நாஞ்சில் மாவட்டத்தில் தோழர் மு. கருணாநிதி
11—6—54: கோட்டாறு தி மு கழக ஆண்டுவிழா
12—6—54: இரணியல் 4 முதல் 6 மணி வரை
குளச்சல் 7 முதல் 9 மணி வரை

சப்மரீன் படை

இந்தியாவில் ஏற்படுத்த பொருளாதார நெருக்கடி

"பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தியாவில் சப்மரீன் படை ஒன்றை ஏற்படுத்த இயலாது," என்று இந்தியக் கப்பற்படை தளபதி பம்பாயில் கூறினார்.

தரைப்படை, விமானப்படை இவைகளுக்கு ஒதுக்கப்படும் பணத்தின் அளவு கடற்படைக்கு கிடைப்பதில்லை யென்றும், ஆகவே கிடைக்கும் பணம் சப்மரீன் படையை நிர்மாணிக்கும் அளவுக்கு இடமளிக்கவில்லை என்றார்.

"தற்காலத்தில் உபயோகப்படும் முறையிலேயே கடற்படை அமைய வேண்டும். பழக்கத்தில் இல்லாத தளவாடங்களை வாங்குவதில் பயன் ஏதும் இல்லை," என்று அவர் மேலும் கூறினார்.

மணி ஒன்றுக்கு 1 கோடி விடை

மின்சாரக் கருவியின் சாதனை !

நியூயார்க், ஜூன் 2—
மின்சார சக்தியால இயங்கும் புதுக் கருவியொன்றை இங்குள்ள வர்த்தக ஸ்தாபனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. மணி ஒன்றுக்கு 1 கோடிக் கணக்குகளை இந்த மின்னணுக் கருவியினால் தீர்க்க முடியும்.

இக்கருவிக்குக் "கணக்குகளைப் போடவும்" அவற்றைத் தீர்க்கவும் காந்த நாடாக் கருவிகள் உள்ளன; இவை விநாடிக்கு 15,000 எழுத்துக்களை அல்லது எண்ணிக்கைகளைப் பதிவு செய்கின்றன.

செய்திக்கதிர்

அறிவுரை
சென்னை ராஜ்ய உணவு தானிய வர்த்தகர்கள் மாநாட்டில் பேசும் போது முன்னாள் முதல் அமைச்சர் ஓ பி. ராமசாமி ரெட்டியார் வர்த்தக சமூகத்தினர் நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்)

★

சம உரிமை
பெண்களுக்கு சம உரிமை அளிக்க வேண்டுமென்று பார்லிமெண்டுக்கு மனுஅனுப்ப வேண்டுமென கல்கத்தாவில் நடைபெற்ற மாதர் காங்கிரஸ் முடிவு செய்தது.

★

தோல்வி
ராட்சப் பனி மனிதனைக் கண்டுபிடிக்க இமயமலையில் ஏறிய பிரிட்டிஷ் குழுவினர் தோல்வி கண்டு திரும்பிவிட்டனர்.

★

சந்திப்பு
பிரெஞ்சுத் தூதவர் ஆஸ்டிரார்க் பாரிசிலிருந்து திரும்பியவுடன் பண்டித நேருவைச் சந்தித்துப் பேசினார். பாரிஸ் பேச்சுவார்த்தைகள் முடிவு சம்பந்தமாய் அவர்கள் பேசினார்கள் என்று தெரிகிறது.

★

லேவாதேவி
பண வீக்கத்தைக் குறைக்க ரிசர்வ் பாங்கி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் வெற்றிபெற்றனவாம். பாங்குகளின் லேவாதேவி சகஜ நிலைக்கு வந்துவிட்டது என்று ரிசர்வ் பாங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது.

★

ரயில் நிலையம்
சென்னை — தாம்பரம் மின்சார ரயில் பாதையில், காசநோய்க்காரர்களின் வசதிக்காக, 'தாம்பரம் சானடோரியம்' என்ற புது ரயில் நிலையம் ஒன்றை வி. வி. கிரி திறந்து வைத்தார்.

★

வானொலி
"ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் நாடு முழுவதும் வானொலி நிலையங்களை நிறுவி, மக்கள் ரேடியோ கேட்கும் வசதிகளைப் பெருக்குவதே யாகும்," என்று இந்திய அமைச்சர் கேஸ்கர், அகமதாபாத்தில் வானொலி நிலைய திறப்பு விழா ஒன்றில் கூறினார்.

★

வெளியேற்றம்
கவர்னர் ஆட்சி ஆரம்பமானதிலிருந்து டாக்காவில் உள்ள சுமார் மார்வாடிகள் வெளியேறுகின்றனர் என்று 'மார்னிங் நியூஸ்' என்ற பத்திரிகை எழுதுகிறது.

★

முடிவு
தமது வாழ்நாளில் பெரும் பாகத்தை பூமிதான இயக்கத்துக்கே செலவிடப் போவதாக ஐதராபாத் காங்கிரசின் முன்னாள் தலைவர் ராமானந்த தீர்த்தா கூறியிருக்கிறார்.

★

மீன் வளர்ப்பு
மீன் வளர்ப்பில் விவசாயிகள் சிரத்தை காட்ட வேண்டுமென்று வேடப்பட்டியில் மீன் வளர்க்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து சென்னை அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

★

முடியாது
அமெரிக்கா, ரஷியா ஆகிய நாடுகளை முறையே காங்கிரசும், கம்யூனிஸ்டு கட்சியும் பின்பற்றுவதால் மக்கள் சுபீட்சத்தை நிலைநாட்ட அவர்களால் இயலாதென்று லோகியா இந்தூரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கூறினார்.

ரேடியோக் கதிரியக்க மழை

இந்தியாவிலும் பெய்யலாம்

ஜப்பானியர் தரும் தகவல்

ரங்கூன், ஜூன் 7—
பிரபல ஜப்பானிய வானசாஸ்திரியும், டோக்கியோ பல்கலைக் கழகத் தலைவருமான டாக்டர் சிகியோசி மட்சுமே, பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் இந்தியா, பர்மா, இந்தோனேஷியா, இன்னும் தென் கிழக்காசிய நாடுகளில் ரேடியக் கதிரியக்க மழை பெய்யக் கூடும் என்று குறிப்பிட்டார்.

இந்த ரேடியக் கதிரியக்க மழை பெய்வதினால் மக்களின் கண் பார்வை பழுதாவது, தலைவலி போன்ற வியாதிகள் பீடிக்கக் கூடுவதுடன், மிருக, மனித இனங்களின் இன உற்பத்தி உறுப்புகளையும் பெரிதும் பாதிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இத்தகு அபாயங்களுக்கு ஆளாக நேரும் எனப் பயப்படும் நாடுகள் ஒன்றுசேர்ந்து, நீர்வலிக்குண்டு, அணுகுண்டு ஆகிய அழிவுச் சாதனங்களை உடைய நாடுகளை, அந்தக் குண்டுகள் பரிசோதிக்கப்படுவதை உடனடியாக நிறுத்தவுடன், அணுசக்திக் கட்டுப்பாட்டிற்கு ஒரு உலக மேற்பார்வை நிறுவனமும் காண முயற்சிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாணவர் முகாமில் குழப்பம்

காங்கிரஸ் கொடி ஏற்ற மக்கள் எதிர்ப்பு

கோலாப்பூர், ஜூன் 4—
பம்பாய்க்கு அருகில் உள்ள வடாங்கி கிராமத்தில் அமைக்கப் பட்டிருந்த மாணவர் முகாம் ஒன்று குழப்பத்தில் முடிந்தது.

காங்கிரஸ் இளைஞர்கள் முகாமில் விழா நிகழ்ச்சியில் காங்கிரஸ் கொடி ஏற்ற முயற்சித்தனர்; இதை மாணவர்களுள் ஒரு பிரிவினர் எதிர்த்தனர்.

காங்கிரஸ் கொடியை ஏற்றக் கூடாது என்று விவசாயி பரிஷத்தைச் சேர்ந்த மாணவர்களும், கிராம வாசிகள் சிலரும் எதிர்த்தனர்: காங்கிரஸ் மாணவர்கள் கொடியை இறக்கிவிட்டு வெளியேறினர்

விழாவில் ஒப். வி. ஜவதேகர் என்பவர் முக்கிய விருந்தாளியாகக் கலந்து கொண்டார். மாணவர்களிடையே ஏற்பட்ட சச்சரவை முன்னிட்டுப் பேச முடியாதென்று வெளியேறினார். அவரைத் தொடர்ந்து வி ஆர். தாஸ்வாய் என்னும் அதிகாரியும் வெளியேறினர்.

போட்டிகளைத் தடை செய்ய வேண்டும்

ஆரணி நகர சபை தீர்மானம்

சென்னை ராஜ்யத்தில் குறுக்கு வார்த்தை போட்டிகளைத் தடை செய்து உடனடியாக அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்று சென்னை சர்க்காரைக் கோரி ஆரணி நகர சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

போப்பாண்டவர் முதல் தடவையாக டெலிவிஷன் மூலம் தன் பக்தர்களுக்குக் காட்சி அளித்தாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (26, ... நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.